**மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

முன்னிலை : திருமதி.ந.மகாலெட்சுமி,M.Sc.,M.Phil.,
துணை இயக்குநர்

இடம் : மதுரை-7.

**செ.மு.ஆணை எண். அ1/2223/2021, நாள்: 30.03.2021**

பொருள்: பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்புப் பிரிவு - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி-IV-ன் கீழ் 2015-2016-2016-2017 மற்றும் 2018-2019ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டு சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை – செல்வி.கு.சகர்பான்நிஷா, அவர்கள் இளநிலை உதவியாளர் பணிக்காலியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை - பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண் 13344/PSD-G1/2019, நாள்: 18.02.2019.
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல் முறை ஆணை எண் நிர்.2/3663/2019, நாள் 04.03.2019.
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.தி)மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1/430/2019, நாள்: 04.03.2019.
4. அரசாணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்.) துறை, நாள் 22.07.2008.

------------

**ஆணைகள்:**

பார்வை (1)-இல் காணும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதம் வாயிலாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)-இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகளின் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி–IV-இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டு, சென்னை சாந்தோம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு (தொழில் திறனற்றோர்க்கானது) ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.கு.சகர்பான்நிஷா அவர்களுக்கு பார்வை (3)-இல் காணும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொழில் திறனற்றோர்க்கானது), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு சென்னை சாந்தோம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் (தொழில் திறனற்றோர்க்கானது) 11.03.2019 அன்று முற்பகல் தற்காலிகத் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 10.03.2020 பிற்பகல் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து, செல்வி.கு.சகர்பான்நிஷா இளநிலை உதவியாளர் அவர்களுக்கு அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

இவரது பணிவரன்முறை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் மீது பிறப்பிக்கப்பட உள்ள இறுதி ஆணைகளுக்குக் கட்டுப்பட்டதாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

30/3/21

துணை இயக்குநா,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
மதுரை – 7.

பெறுநர்

செல்வி.கு.சகர்பான்நிஷா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
மதுரை – 7.

<u>நகல்</u>

1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு-35
3. பட்டியல்